செ.வெ.எண் : 09/செப்டம்பர்                                        நாள் : 05.09.2017

## இராமநாதபுரம் மாவட்டம்

## பொதுவிநியோகத் திட்ட குறைதீர் கூட்டம் வருகின்ற 09.09.2017 அன்று நடைபெறவுள்ளது.

## மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தகவல்

பொதுவிநியோகத் திட்டத்தின் கீழ் பொதுமக்கள் தங்களுக்கு தேவையான அத்தியாவசியப் பொருட்களைப் பெற்று பயனடைந்து வருகின்றனர். இந்நிலையில் மாவட்டத்தின் ஒவ்வொரு வட்டத்திலும் ஒரு கிராமத்தில் சுழற்சி முறையில் பொதுவிநியோகத் திட்ட குறைதீர் கூட்டம் நடத்தப்பட்டு வருகிறது.

அதனடிப்படையில் செப்டம்பர் 2017 மாதத்தில் 09.09.2017 (சனிக்கிழமை) அன்று பொதுவிநியோகத் திட்ட குறைதீர் கூட்டம் கீழ்காணும் கிராமங்களில் நடத்தப்படவுள்ளது:

இராமநாதபுரம் மாவட்டம், இராமநாதபுரம் வட்டம் கழுகூரணி, இராமேஸ்வரம் வட்டம் தங்கச்சிமடம், திருவாடானை வட்டம் கட்டவிழாகம், பரமக்குடி வட்டம் அரியனேந்தல், முதுகுளத்தூர் வட்டம் முதுகுளத்துார் டவுன்-4, கடலாடி வட்டம் கன்னிராஜபுரம், கமுதி வட்டம் இராமசாமிபட்டி, கீழக்கரை வட்டம் லெட்சுமிபுரம் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த பொதுமக்கள் பொதுவிநியோகத் திட்டம் சம்பந்தமான தங்களின் குறைகள் மற்றும் மின்னணு குடும்ப அட்டைகளில் பிழைத்திருத்தம் புகைப்படம் பதிவேற்றம் போன்ற குறைகள் ஆகியவற்றை நிவர்த்தி செய்ய குறைதீர் கூட்டம் வரும் 09.09.2017 (சனிக்கிழமை) காலை 10.00 மணியளவில் நடைபெறவுள்ளது.

இக்குறைதீர் முகாமில் பொதுமக்கள் மின்னணு குடும்ப அட்டைகளில் பிழைத்திருத்தம், பெயர் சேர்த்தல், பெயர் திருத்தம், பெயர் நீக்கல், முகவரி மாற்றம் போன்ற தொடர்புடைய மனுக்களை அளித்து பயன்பெறலாம்

மேற்கண்ட தகவலை இராமநாதபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**